# கல்கி

நிறுவனர்:

22-12-68

விலை 20 காசு



# ஆண்டுக்கு 56 கோடி; அதற்குரிய பலன் என்ன?

நாட்டில் கல்விச் செல்வம் வளர்ந்தால் மற்றைய செல்வங்கள் எல்லாம் பன் மடங்கு தானே வளரும் என்பதைக் கருத்தில் கொண்டுதான் தமிழக அரசும் கல்விக்காக மிகப் பெருவாரியான பணத்தைச் செலவழித்து வருகிறது.

1968—69 ஆம் ஆண்டிற்காக 248 கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்கின்ற தமிழக அரசு, பொதுக் கல்விக்காக மட்டும் ரூபாய் 56 கோடி ஒதுக்கியுள்ளது.

சமூக வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாகத் தேவைப்படும் மருத்துவத்துறையை இரண்டாவது கட்டத்தில் வைத்து, அதற்குக்கூட ரூபாய் 15 கோடிதான் தமிழக அரசு செலவழிக்கிறது.

இதிலிருந்து கல்விக்கு நாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பது தெரியவரும்.

அரசினர் துறைமட்டுமல்லாமல், உள்ளாட்சித்துறை, தனியார்துறை, பிற நாட்டு அற அமைப்புக்கள் போன்றவைகள் கல்விக்காக மேலும் பல கோடி ரூபாய்கள் செலவழித்தும், எல்லாரும் கல்வி கற்றிருக்கிறார்கள் என்ற நிலைமையை நாம் இன்னும் காணமுடியவில்லை.

இன்றைய நிலையில், நூற்றுக்கு நாற்பத்திரண்டு பேர்கள் தாம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். இன்னும் ஐம்பத்தெட்டுபேர் எழுதப் படிக்கத் தெரியாத தற்குறிகளாகத்தான் இருந்து வருகிறார்கள்.

ஆறு வயதிலிருந்து 11 வயதுக்குட்பட்ட மாணவர்களில் நூற்றுக்கு 94 பேரைத்தான் இவ்வாண்டு பள்ளிக்குக் கொண்டுவர முடிந்திருக்கிறது. இன்னமும் ஆறு பேர்கள் நமது கைக்கும் அகப்படாமல், கண்ணுக்கும் தென்படாமல் எங்கேயோ திரிந்துகொண்டிருக்கிறார்கள்.

வளர்ச்சியுற்ற பிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நாம் எந்த இடத்திற்கு வந்திருக்கிறோம், நாம் எந்த இடத்திற்குச் செல்லவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்ளவே இந்த நிலையைக் குறிப்பிடுகிறேன்.

கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் இடையே இருக்கும் பெரிய இடைவெளியை விரைவில் போக்க இந்தத் தலைமுறையைச் சார்ந்த படித்தவர்கள் அனைவரும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கடுமையாக உழைத்து, நீங்காக் கடமையை ஆற்ற வேண்டியவர்களாக இருக்கிறது. இதற்குக் காரணமாக இருக்கும் பிரச்சினை ஒவ்வொன்றையும்அவ்வப்போது அந்தந்தக் கல்வி நிலையங்களிலுள்ள மாணவப் பிரதிநிதிகள் தாங்களாகவேகூடி விவாதித்துப் பிரச்சினையின் தன்மையை அறிந்து உரியவர்களை அணுகித் தீர்த்துக்கொள்வது என்ற பழக்கம் ஏற்படவேண்டும் இதனால் ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் பழக்கமும் மாணவர்களுக்கு ஏற்படும்.

இந்தப் பண்பும் பழக்கமும் அவர்களை எதிர்காலத்தில் சிறந்த ஜனநாயக வாதிகளாக ஆக்கும். ஒருமாணவரின் அல்லது சில மாணவர்களின் அல்லது பல மாணவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக இருந்தாலும் அல்லது முறையீட்டைச் சொல்லுவதாக இருந்தாலும் அல்லது குறைப்பாட்டைப் போக்குவதாக இருந்தாலும் அவற்றைச் செய்துகொள்வதற்கு மாணவர்களி



டையே கல்லூரிக்குக் கல்லூரி பள்ளிக்குப் பள்ளி ஒரு தனி அமைப்பு முறை ஏற்பட வேண்டும்.

ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர்களின் நம்பிக்கைக்குரிய மாணவர் பிரதிநிதிகள் அமைந்த மாணவர் குறை தீர்க்கும் மன்றம் ஒன்று அமையப் பெறுவது நல்லது.

எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் அதனுடைய நியாயம் நியாயமற்ற தன்மையை இந்த மன்றம்தான் முதலில் ஆராய்ந்து பார்த்துத் தீர்வு காணவேண்டும்.

இந்த மன்றம் நியாயமற்ற நியாயமான பிரச்சினைகளுக்கு கல்லூரி முதல்வரிடத்திலோ அல்லது கல்லூரித் தலைவர் மூலமாக உரியவரிடத்திலோ தீர்வு காணும் முறையை மேற்கொள்ளும் பழக்கம் ஏற்பட்டால் கட்டுப்பாட்டை நிலைநாட்ட உதவி செய்வதாக அமையும்.

ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர்களுக்கும் முதல்வருக்கும் இடையில் இரு சாராரின் நம்பிக்கைக்கும் உரிய ஒரு பேராசிரியர் நல்லெண்ணத் தூதுவராக அமைவது சிறந்த நலனை விளைவிக்கும். இந்த ஏற்பாடுகள் கல்லூரி தோறும் செய்யப்பட வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

தொழிற்சாலைகளுக்கும் கல்விச்சாலைகளுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்கின்றன. கல்லூரிகள் தொழிற்சாலைகள் போன்றவைகள் அல்ல. மாணவர்கள் எல்லோரும் தொழிலாளர்களைப் போன்றவர்களும் அல்லர்.

தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டாலும் கதவடைப்பு ஏற்பட்டாலும் தொழிலதிபர்களுக்குப் பெருந் தொல்லையும் தொழிலாளர்களுக்குச் சிறு தொல்லையும் ஏற்படும்.

அதுபோலக் கல்லூரிகளில் படிப்பு நிறுத்தப்பட்டாலும் கல்லூரி அடைப்பு ஏற்பட்டாலும் மாணவர்களுக்குப் பெருந்தொல்லையும் கல்லூரி முதல்வருக்கும் ஆசிரியர்களுக்கும் சிறு தொல்லையும் ஏற்படும்.

ஆகவே தொழிற்சாலைக்கும் கல்விச்சாலைக்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறதென்பதையும் கல்விச் சாலையின் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் கட்டிக் காக்க வேண்டிய பெருங்கடமை மாணவர்களையே சார்ந்ததாக இருக்கிறது என்பதையும் மாணவர்கள் உணர வேண்டும்.

—நாவலர். நெடுஞ்செழியன்.

## காந்தி வாக்கு

"உண்மையில் பற்றுடையவன் பழக்க வழக்கத்தை மதிக்கவேண்டும் என்பதற்காக எதையும் செய்யமாட்டான். எப்போதும் தன்னைத் திருத்திக்கொள்வதற்குத் தயாராக இருப்பான். தான் செய்தது தவறு என்று உணரும்போது அதை ஒப்புக்கொண்டு திருத்திக்கொள்ள வேண்டும்."

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 22—12—68 இதழ் 22

# இந்தித் திணிப்பு—வளரட்டும்!

அனைத்திந்திய வானொலியில் இந்திச் செய்தி அறிக்கைக்கு முதலிடம் தந்து, இந்தி ஆதிக்கத்துக்குக் கால் கோலி விட்டிருப்பதன் மூலம், தமிழகம் கொதித்துக் கொண்டிருக்கிறது.

இதன் எதிரொலியாக தமிழ் நாடெங்கும் பல கல்லூரிகள், கல்விக்கூடங்கள் மூடப்பட்டுக்கொண்டே வருகின்றன.

இந்திப் பிரச்னை என்கிறபோது, அதில் முழுக்க முழுக்க தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் போக்கு தமிழக மாணவர்களிடத்திலே பெரிதும் இடம்பற்றி இருக்கிறது.

ஒருமைப்பாட்டை ஊக்குவிக்கும் முறை என்ற பேரால் புகுத்தப்படும் இந்தி, மாணவர்கள்தம் எதிர்காலத்தைச் சீரழித்துக்கொண்டு வருவதை யாரும் ஒப்புக்கொள்ள முடியாது.

கடந்த கிழமை தமிழகம் வந்திருந்த மத்திய அரசின் ஒலி பரப்புத் துறை அமைச்சர் கே. கே. ஷா அவர்கள், தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்தபோது, இது தொடர்பான தமிழகத்தின் கருத்தை மத்திய அமைச்சரிடம் விளக்கமாக எடுத்துக் காட்டியதுடன் தமிழக செய்தித் துறை அமைச்சர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் மூலம், அந்த அமைச்சருக்கு முழு விளக்கம் அளிக்குமாறும் ஏற்பாடு செய்யப்பட்டு, அதன்படி விளக்கம் பெற்றும் சென்றிருக்கிறார்.

திரு. ஷா, சென்னையை விட்டுப் புறப்படுமுன், தமிழக மக்களது கோரிக்கை அனுதாபத்துடன் ஆராயப்படும் என்றும், இது தொடர்பாக பிரதமரிடம் எடுத்துக் கூறுவதாகவும் கூறியதுடன், தமிழக மாணவர்கள்பால் தமக்கு அன்பு அதிகமென்றும் தமக்குக் கருப்புக் கொடி காட்டல் போன்ற ஏற்பாடேதும் நடைபெறாததொன்றே அதற்குச் சான்று என்றும் கூறிவிட்டுப் போனார்.

போன வேகத்தில், டெல்லியிலிருந்து பேசினார், "முடிவு செய்தது—செய்ததுதான்" என்ற தொனியில்.

நாடாளுமன்றமே கொதித்தெழுந்து இதுபற்றி எதிர்ப்புக்குரல் எழுப்பியபோது-

> இந்திச் செய்தி அறிக்கைக்கு முதலிடம்
> கொடுத்தது கொடுத்ததுதான்

என்று ஆணவமாகப் பேசி இருப்பதுடன், இதுபற்றி வடக்கத்திய மக்கள் யாரும் கோரிக்கை எதுவும் எழுப்பாதபோது, தான்தோன்றித்தனமாக இப்படி ஒரு ஏற்பாடு தேவையா? என்ற கனல் உமிழும் வினாக்களுக்கு,

> இந்தி பேசும் மக்கள் இதற்காகத்
> தன்னைப் பாராட்டுவார்கள்

என்று சொல்லி, பாராட்டவேண்டும் என்ற தமது வேட்கையையும் வெளிப்படுத்தி இருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தில் இதன் விளைவாக எழுந்துள்ள நிலைமைகள் பற்றி அவர் பதில் சொல்ல மறுத்திருப்பதுடன் வாதிக்கவும் மறுத்திருக்கிறார்.

> கல்லூரிகள் மூடப்பட்டுக்கிடக்கட்டும்—
> மாணவர்கள் தம் படிப்புக் கெட்டழிந்து
> போகட்டும். தமிழக அரசு இந்த விஷயத்
> தில் தடுமாறிக்கொண்டிருக்கட்டும்.

என்ற கருத்து மத்திய அமைச்சர் ஷாவிடம் இருக்குமானால் வன்மையான கண்டனத்துக்குரியவர் அவர். நாடாளுமன்றத்தில் அவர் அளித்திருக்கும் பதில்கள் மூலம், நாம் இதனைப்புரிந்துகொள்ள முடிகிறது.

இந்த வருந்தத்தக்க நிலைமைக்கு முழுக்க முழுக்க அமைச்சர் ஷா அவர்களையே குறைசொல்ல முடியாது. இந்த நிலைமைக்கு மத்திய அமைச்சும்கூட கூட்டுப் பொறுப்புடையதாகும்.

இந்திப் பிரச்னையில்தான் தமிழ் நாடு காங்கிரஸ் தன் ஆட்சிப் பொறுப்பை இழந்தது என்பதனை ஒப்புக் கொள்ளமுடியாததாலேயே இதுபோன்ற விஷமத்தனங்களை மேலும் மேலும் செய்து கொண்டே வருகிறார்கள்.

ஆனால் இதற்காக மாணவர்கள், தம் படிப்பினைக் கெடுத்துக்கொண்டு எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டு வருவதும், கல்லூரிகளை மூடும்படியான நிலைமைகளைத் தோற்றுவித்து வருவதும் விரும்பத்தக்கதல்ல.

தமிழகத்தின் தவப்பயனாய், ஆட்சி பீடத்தில் இந்தியினை எதிர்க்கின்ற அரசு கோலோச்சிக் கொண்டிருக்கிறது. அரசு, தன் முழுவலிமையையும் பயன்படுத்தி இதனை எதிர்க்கத் தயங்காது. "ஆகாஷ் வாணி"யை ஒழித்து வெற்றி கண்டது இந்த ஆட்சி. அதுபோல் இதனையும் மாற்றியே தீரும்.

காஷ்மீர் மாநிலத்துக்கு மட்டும் இந்தப் பிரச்னையில் விதிவிலக்கு அளித்திருக்கும் மத்திய அரசு, இதுபோல் தமிழகத்துக்கும் விதிவிலக்கு அளிக்கும் நாள் தொலைவில் இல்லை.

1967ல் இழந்துவிட்ட ஆட்சி அதிகாரத்துக்குக் காரணமாகவிருந்த இந்தி, அடுத்து பிப்ரவரியில் நடைபெறவிருக்கும் மாநகராட்சித் தேர்தலுக்கும் பயன்படுவதற்குத்தான் இப்போதைய இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள் போலும்!

எனவே, இதுபோன்ற "இந்தித் திணிப்பு" வளரட்டும்! ஆல்போல் வளரட்டும்!! என்றே கூறிக்கொள்வோம்.

கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப்பின் மீண்டும் கல்விக்கூடங்கள் திறக்கப்படும்போது, இந்தக் காரணத்துக்காக—அவை தடுக்கப்படக்கூடாது என்றே மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

★

# இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

## தரங்கெட்ட சேதி—முரண்பட்டுப்போச்சு!

புரட்டுகளின் உற்பத்திச்சாலை என்ற ஏட்டில் அமைச்சர் ஒருவருக்குக் கருப்புக்கொடி காட்டிய செய்தி வெளியாகி இருக்கிறது. செய்தியின் இடையே, "நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர் மந்திரி என்பதனால் அதிகாரிகள் எவ்வளவோ முயற்சித்தும், மக்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை; ஐந்தாறு பள்ளிப்பிள்ளைகளை அழைத்துவந்து மந்திரிமுன் உட்காரவைத்திருந்தனர்" என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து, அமைச்சரின் இந்தக் கூட்டத்தை மக்கள் புறக்கணித்துவிட்டார்கள் என்றாகிறது. ஐந்தாறு பள்ளிக் குழந்தைகள் மட்டுமே இருக்கும்படிச் செய்யப்பட்டார்கள் என்றும் புரிகிறது. இதனையடுத்து, அதே செய்தியில் "அவர் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நேரம் முழுவதும், திரண்டிருந்த மக்களின் கண்டன முழக்கங்கள் கேட்டுக்கொண்டே இருந்தன" என்றும் எழுதி இருக்கிறது அந்த ஏடு. முதலில் மக்கள் கலந்துகொள்ளவில்லை யென்றும், பின்னால் திரண்டிருந்த மக்கள் என்றும் முரணாகச் செய்தி வெளியிட்டிருக்கிறது. இதில் பொய் எது? உண்மை எது என்று தெரிந்துகொள்ள வேண்டாமோ! கேட்டால் இன்னொரு பொய்யைச் சொல்வார்கள்! நமக்கேன் இந்த வம்பு?

## கேரளாவிலும் இருக்கிறதே!

தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டத்தை வலது கம்யூனிஸ்டுத் தலைவர் கல்யாணசுந்தரனார் மிகக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். சூதாட்டமனப்பான்மையை வளர்ப்பதாக மற்றவர்களைப் போலவே இவரும் பேசி இருக்கிறார். பேச்சுக்கிடையே ரஷ்யாவிலும் இப்படி பரிசுச் சீட்டுத் திட்டம் இருப்பதாகவும், மக்களது வாங்கும் பொருள்களில் 10 சதவீதம் மட்டுமே வாங்குவதாகவும் கூறி, தமிழகத் திட்டம் மட்டும் கண்டனத்துக்குரியது என்று சொல்லி இருக்கிறார். ஈரோட்டுக்கு சில நூறுமைல்களுக்கு அப்பாலுள்ள கேரளாவில் இப்படியொருதிட்டம் அமோகமாக நடைபெற்று வருவதை மட்டும் ஏனோ மறந்துவிட்டார். அவர் கலந்துகொள்ளும் அடுத்தப் பொதுக் கூட்டத்தில், கேரளாவையும் கண்டிப்பார் என்று மட்டும் இப்போது எதிர்பார்ப்போமாக!

## சீனா இப்படிச் செய்யலாமா?

ஒருவன், தன் எதிரிக்கு எதிரியாக விருக்கிறான் என்ற காரணத்தாலேயே, எதிரியின் எதிரியுடன் கூடிக் குலாவத் தொடங்கினால், அதன் எதிரொலி எப்படி இருக்கும் என்பதை இப்போது பாகிஸ்தான் முழுமையாக உணரும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. அதிபர் அயூபுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிளர்ச்சிகளுக்கும், சீனாவுக்கும் முடிச்சுப் போட்டுப் பேசி விட்டாராம் பாகிஸ்தானின் சீனாத் தூதர். சீனாவுக்குக்கோபம் வராதா? தன்னையும் ஒருவன் குறை காணலாமா? வந்தது கோபம் சீனாவுக்கு! பாகிஸ்தான் தூதரை 'மூட்டை கட்டி' வீட்டுக்கே அனுப்பி வைத்துவிட்டதாம் அது! இந்தியாவின் மீது பாகிஸ்தானுக்கு இப்படியொரு காழ்ப்பு எதனால் ஏற்பட்டிருக்கிறது என்பதே கண்டுகொள்ள முடியாத மர்மமாக இருக்கிறது. இதன் காரணமாக, சீனாவுடன் குலவப்போய், சீனா, இப்படியொரு அவமானத்தைத் தனக்குத் தேடித்தந்துவிட்டதே என்று பாக். அதிபர் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறாராம்! ரஷ்யாவின் பக்கம், அதிகமாய்ச் சாய்ந்துகொண்டிருந்தால்......? என்று விடுக்கும் ஒரு எச்சரிக்கை இது! என்றும் பாக். அரசியல் நோக்கர்கள் கருத்துரைக்கக்கூடும். எது எப்படியானாலும் எதிரிக்கு எதிரி நண்பன் என்பது பேராபத்தில்தான் முடியும் என்பதை இப்போதாவது பாக். சிந்திக்க வாய்ப்பேற்பட்டால் நல்லது. நடக்குமா இது?

## தடியும் கொடியும் வாழ்க!


ஐந்தாறு மாதங்களாக, தமிழ் நாட்டில் பரவலாக கறுப்புத் துணியின் விற்பனை மிகவும் மந்தமாகவிருப்பதாக ஒரு செய்தி வெளிவந்தால் யாரும் ஆச்சர்யப்படத் தேவையில்லை. காரணம், காங்கிரசுக்கட்சி, கழக அமைச்சர்களுக்கு, அவர்கள் செல்லுமிடங்களிளெல்லாம் கருப்புக் கொடிக் காட்டி, கூட்டத்துக்கும் ஒரு பரபரப்பான சூழ்நிலையை உண்டாக்கிக் காட்டிக்கொண்டிருந்த நிலைமையிலிருந்து விடுபட்டு, தனக்குத்தானே குடுமிபிடி சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததுதான். கடந்த ஆண்டில் மட்டும் கருப்புத் துணிக்கு அமோக விற்பனை என்ற நிலைமை திடீரென சரியத் தொடங்கியதும், தொடர்புடைய தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களுக்குக்கஷ்டம்தானே! அதைஅறிந்து தானோ என்னவோ, தங்களுக்குள்ளே 'குடுமிப்பிடி' என்றாலும் ஒரு கையில் தடியையும், அதில் கருப்புக் கொடியையும் கட்டாயம் வைத்திருப்பது என்று முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது. அதனால்தான் இந்தக் கிழமைத் தொடக்கத்தில், நாகர்கோயிலிலும், மத்தியில் சென்னை அருகிலும் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது. இது அடுத்த பிப்ரவரி தேர்தல் வரையில் நீடிக்குமென்று ஒரு செய்தி—வெளிவராத செய்திதான்! உண்மையானால் கருப்புத் துணி தயாரிப்பாளர்களுக்கு நம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

## அது என்ன பிரச்னை?

உலக நாடுகள் பலவற்றில் "மாணவர் பிரச்னை" என்பதாக ஒன்று பலமாக அடிபட்டுக்கொண்டு வருகிறது. இந்தியாவும் விதிவிலக்கல்ல! தமிழ்நாடும் அப்படித்தான்! ஆனால் தமிழ்நாட்டு மாணவர்கள் பிரச்னைகளை அணுகு முறைபற்றிப் புகழ்ப்பெற்றவர்கள். ஆனால் இந்தப் புகழ் இப்போது சரிந்துகொண்டு வருகிறது. 'மாணவர் பிரச்னை' என்பதாக ஒன்று இருக்கிறதா? அது என்ன பிரச்னை? என்று கேட்டு தமிழ் இதழ் ஒன்றில், கல்லூரி மாணவர் ஒருவர் வினாவெழுப்பி—விளக்கி இருக்கிறார். ஆராயப்பட வேண்டியதுதான் அது. எப்படியாவது மாணவர் சமூகத்துக்கு கல்வி ஒன்றுதான் முக்கியம் என்று பட்டால் சரி! படுமோ என்னவோ!

—ராஜிமணாளன் தொகுத்தவை.

★



# காதலிக்க ஒருத்தி

வாணவன்

நானும்தான் தினமும் பஸ்ஸில் போகிறேன்; அதற்குமுன் அரைமணி நேரத்திற்குமேல் பஸ்ஸைக் காணோமே காணோமேஎன்று தவம் கிடக்கிறேன். அந்த நேரத்தில் அங்கு நின்றுகொண்டிருக்கிற எந்தப் பெண்ணும் புன்சிரிப்பைச் சிந்தியதில்லை. "டைம் ப்ளீஸ்!" என்று தங்கள் கனியிதழ்களைத் திறந்ததில்லை; விழிக்கோணத்தில் சொல்லும் காதலால் என்னைக் கோலோச்சியதில்லை; தங்கள் மேலாடையை என்மேல் பறக்கவிட்டு என் மேனியைப் புல்லரிக்கச் செய்ததில்லை; 'இன்று ரெயின்போவில் சோபியாலாரெனின் 'பொகாஷியோ-70 சீட் ரிசர்வ் செய்திருக்கிறேன் வருகிறீர்களா?' என்று கொஞ்சியதில்லை; ஏன் இன்னும் சொன்னால் என்னை நிமிர்ந்துகூடப் பார்த்ததில்லை.

ஆனால் நண்பன் விசுவம் மட்டும் மேலே சொன்ன அத்தனை 'விஷயங்களுக்கும்' ஆளாகி இருக்கிறான். இன்றுகூடத் தன் பஸ்ஸ்டாண்ட் காதலி ஒருத்தியுடன் ஜாலியாக மழம்புழா போகிறான். அந்தக் காதலி, விசுவத்தின் காதல் சாம்ராஜ்யத்தில் மூன்றாவதுபட்டத்தரசி.

இதையெல்லாம் அவன் சொன்னதிலிருந்து, நான் போக வேண்டிய பஸ்ஸை வேண்டுமென்றே விட்டுவிட்டு, இன்னும் ஓர் அரைமணி வெயிட்' பண்ணிப்பார்க்கிறேன்.

ரோடில் போகிற ஒவ்வொரு பெண்ணையும் உற்றுப்பார்க்கிறேன், என்னைக் கவனிக்கிறாளா என்று! எதிர்ப்புறத்திலிருந்து ரோடைக் 'க்ராஸ்' செய்து கொண்டு வரும் போது, எதிர்க்காற்றில் புடவைத் தலைப்பு நழுவி விழுவதைக்கூடக் கவனிக்காமல் வருகிற பெண்ணைப் பார்த்துப் புன்னகை புரிகிறேன். பஸ்களின் பின்பகுதியில்—பெண்கள் அமரும் பகுதியில்—ஓயாமல் நோட்டம் விடுகிறேன்.


ஆனாலும், பலன்தான் ஒன்றுமில்லை.

'ஈவ்னிங் இன் பாரிசின்' இதமான வாசனைகலந்த என் டெரிலின் சட்டை வியர்வையால் நனையும் வரையும் காத்திருந்துதான் பார்க்கிறேன்; அலுவலகத்திற்குச் சில சமயம் நேரங் கழித்ததும் போகிறேன். அதற்கு ஜி.எம். மிடமிருந்து வசவு வாங்கியதுதான் பலன்.

இதற்கிடையில் எனக்காகப் பெண் தேடும் படலத்தை வீட்டில் ஆரம்பித்துவிட்டார்கள். எனக்குப் பிடிக்கவில்லை இது. காதலுக்குப் பின், கல்யாணம் செய்துகொண்டு வாழ்வதற்கும், நேரடியாக எவளையோ கல்யாணம் செய்துகொண்டு வாழ்வதற்கும் வித்தியாசம் இல்லையா? முன்னதில் காதல் ஒரு 'எக்ஸ்ட்ரா எக்ஸ்பீரியன்ஸ்'! இல்லையா? காதலிப்பது, 'ப்ரி—மாரியேஜ்' விஷயமாயிற்றே? இது நழுவ விடலாமா?

இந்த நாலைந்து நாட்களாக, பஸ் ஸ்டாண்டில் ஒரு புதிய முகத்தைப் பார்க்கிறேன். டைப்பிஸ்ட் போலிருக்கிறது. விரல் முனைகள் மழுங்கி மொட்டையாக இருக்கின்றன. அடிக்கடி பெருமூச்சு விடுகிறாள்; அடிக்கடி சிரிக்கவும்—புன்சிரிப்புதான் செய்கிறாள், தோளுக்குக் கீழே, உள்ளங்கை அகலத்திற்குக் கை வைத்த ஜாக்கெட்டில், அவள் அடிக்கடி, தலையில் சொருகிய ரோஜாப்பூ இருக்கிறதா என்று தலையைத் தொட்டுப் பார்க்கும் போதெல்லாம், ஊறியிருக்கிற வியர்வைக் கசிவுகள் என்னை என்னவோ செய்கின்றன. கை, தலைக்குப் போகும் போதெல்லாம் தோளின் கீழ்ப்புறத்திற்கும் வயிற்றுக்கும் இடைப்பட்ட கோணத்தில் நான் மயங்கிவிடுகிறேன். பொல்






# இப்பொழுது

## தாராளமாகக் கிடைக்கிறது

கட்டுப்பாடுகள் ஒன்றும் இல்லாமல்

A DALMIA ENTERPRISE

**டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்**

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு வொர்க்ஸ்: டால்மியாபுரம் (சென்னை மாநிலம்)

ஸோல் ஸெல்லிங் ஏஜன்ட்ஸ்: சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் பிரைவேட் லிமிடெட

டால்மியாபுரம் (சென்னை மாநிலம்)


லாத கோணம் அது. நான் கையில் வைத்திருக்கிறஹெடி லாமரின்எக்ஸ்டசி அண்ட் மி; மை லைஃப் ஆஸ் எ வுமன்' புத்தகத்தை வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாள்; எனக்கு வேண்டும் என்று கண்ணால் கெஞ்சுவது போலிருக்கிறது; சட்டென்று அவள் கையில் திணிக்கிறேன். "படித்துவிட்டுச் சாவகாசமாய்த் தாருங்கள்!" அவள் வெறும் புன்னகையை மட்டும் உதிர்க்கிறாள். நான் உருகிப் போகிறேன், பஸ்ஸில் போகாமல் டாக்சியில் போகிறேன். என் ஜென்மம் புனிதமடைந்துவிட்டது. காதலே உன் பெயர் சொர்க்கம்!

இந்த நாடகம் தினமும் நடக்கிறது. புத்தகங்கள்—செக்ஸ் நாவல்கள் கைமாறுகின்றன. அவள் பேசாமலேயே என் உள்ளத்தைச் சுருட்டிவிடுகிறாள். நான் ஒவ்வொரு இரவும் தவித்துப் போகிறேன். ஒரு நாள் சினிமாவுக்கே கூப்பிடுகிறேன்; தலையை ஆட்டுகிறாள், வேண்டாம் என்று! கன்னம் மட்டும் செம்மையைக் கூட்டுகிறது. தினமும், அவளைப் பஸ் ஏற்றி அனுப்பிவிட்டுத்தான் அலுவலகம் போகிறேன். அங்கே, அத்தனை பேர் ஒட்டு மொத்தமும் என்னையே பார்ப்பது போல் இருக்கிறது. ஸ்டெனோ-டைப்பிஸ்ட் லூர்து மேரி, தன் முப்பத்திரண்டு வயது முகத்திற்கு என்னைப் பார்க்கும்போதெல்லாம், இன்னும் கொஞ்சம் பவுடரை அப்பிக் கொள்கிறாள்.

எத்தனையோ மாறிவிட்டேன், இந்தப் பத்து நாட்களில். பெற்றோர் பார்த்த ஒரு உதவி கலெக்டரின் பெண்ணை வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். காதலி இருக்கும்போது, கல்யாணம் செய்வதா இன்னொருத்தியை?

இன்று நேரத்திலேயே வந்துவிட்டேன். அவளை இன்னும் காணோம். விசுவம் எங்கிருந்தோ ஸ்கூட்டரில் வந்திறங்குகிறான், "டேய், என்னடா இது, இந்நேரத்தில்?" அவன் குரலில் குறும்பு தெறிக்கிறது. என் விஷயத்தைப் பற்றிச் சொல்லலாமா என்று யோசிக்கிறேன். கொஞ்ச தூரத்தில் என் காதலி வந்துகொண்டிருக்கிறாள். விசுவமும் பார்க்கிறான்; எனக்குப் பொறுமையாக இருக்கிறது.

"உனக்குத் தெரியுமா, இவளை?" என்கிறேன்.

"தெரியாமல் என்ன! கே. ஆர், ஜி. பஸ் கம்பெனியில் டைப்பிஸ்டாக இருக்கிறாள்!"

"'கட்' எப்படி?" என்கிறேன்.

"எல்லாம் சரிதான்! பாவம் வாய்தான் ஊமை. கடவுளைக் கல்லெடுத்து அடிக்கவேண்டும் போலிருக்கிறது!"

என் இதயம் வெடிக்கும்போல் இருக்கிறது. அவள் பேசாத மர்மம் புரிகிறது. ரோடில் போகிற வாகனங்கள் எல்லாம் என்மேல் ஏறுவது போல் இருக்கிறது!

★

# கடவுள் வாழ்த்து!

ஆயிரத்தி முந்நூற்று முப்ப தான
அருங்குறளைத் தந்துள்ள எட்டி னுள்ளே
பாயிரத்தை வைத்துள்ளார் முதன்மை யாக.
பாடுகிறார் அன்பாலே கடவுள் வாழ்த்து.
வேய்ந்திருக்கும் செஞ்சொற்கள் மெருகு கூட்ட
விழுமியநற் கருத்துக்கள் அறிவை ஊட்ட
தோய்ந்திருக்கும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
தொன்னூலில் காண்போமே கடவுள் வாழ்த்து.

"எழுத்துக்கு அகரந்தான் அன்னை யாகும்.
இறைவன்தான் அனைத்துக்கும் மூல மாகும்."
அழுத்தித்தான் சொன்னாரே விளக்க மாக.
ஆனாலும் மதச்சார்பு துளியு மில்லை.
ஒழுக்கத்தின் விழுப்பத்தைச் சிதைக்க வல்ல
ஒவ்வாத பொருந்தாத கதையளந்து
இழுக்கிந்த நாட்டுக்கு சேர்க்க வில்லை.
ஒருதெய்வம் உண்டென்று முரசொலித்தார்.

வாலறிவன் என்றாரே கடவுள் தன்னை.
வள்ளியுடன் தெய்வானை மணந்து கொண்ட
வேலவனைச் சொன்னாரா? இல்லை இல்லை
வேழமுகம் என்றாரா? அதுவு மில்லை
காலமதை வென்றுள்ள மூத்த நூலில்
காட்சிதரும் தெய்வத்தை வணங்கி நின்றால்
சீலமுடன் இந்நாடு சிறப்பை எய்தும்.
சீர்திருத்த எண்ணங்கள் முகிழ்க்க லாகும்.

"உலைவின்றி தாழாது உஞற்று வோர்கள்
உப்பக்கம் காண்பாரே ஊழை வென்று.
இலையென்று தெய்வங்கள் மறுத்த போதும்
எண்ணங்கள் நிறைவேறும்" என்று சொன்னார்.
தலைக்குள்ளே எழுத்துண்டு என்று சொல்வோர்
தாழாத தாளாண்மை ஏற்றுக் கொண்டால்
நிலைபெற்று நிமிர்ந்தோங்கும் அறிவு இங்கே.
நேர்மைக்கு முரணான மடமை நீங்கும்.

"இரந்தேனும் உயிர்வாழ எண்ணு கின்ற
இழிவான நிலையிங்கு இருக்கு மானால்
பரந்தேதான் கெடவேண்டும் ஈசன்" என்று
பறைசாற்று கின்றாரே உணர்ச்சிபொங்க.
புரட்சிக்கு வித்தாக, புதுமை யாக
பெயரொன்றும் சூட்டாத கடவுள் தன்னை
சிரந்தாழ்த்தி வணங்கத்தான் சொல்லி விட்டு
சிந்தித்து சினத்தீயால் முழங்குகின்றார்.

சமுதாயச் சீர்கேட்டைச் சாடுகின்ற
கண்ணகியின் வரலாற்றைப் பாடுகின்ற
அமுதான சிலம்புக்குள் இளைய சேரன்
அன்பாலே வணங்கியது இயற்கை யைத்தான்.
நமதாசான் குறள்நூலில் சொன்ன தெல்லாம்
நம்பிக்கை இறைவன்பால் கொள்க என்றே.
சமயங்கள் சாராத இறைமை யன்பால்
செய்வோமே வழிபாடு குறளை ஏற்று.

—சி. விநாயகமூர்த்தி.



# இதயம் இரும்போ?

ஜே.வி.நாதன்

ஊறிச் சுழன்றடித்தது பேய்மழை ‘பளீர் பளீர்’ என்று வானத்தில் கோடிழுக்கும் மின்னல்கள்! அண்டமே அதிர்கிறாற் போல இடிச்சப்தம்!

நள்ளிரவில், கொட்டும் மழையில் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு ‘விருட் விருட்’டென்று ஓட்டமும் நடையுமாக ஒரு இளம் பெண் செல்வதென்றால்...?

எவ்வளவு பெரிய பைத்தியக்காரி. நான்!

“போடி, போ! என்னிக்குமே திரும்பி வராதே! இந்த வீட்டில் அடியெடுத்து வைக்காதே, என்னைப் பொறுத்தவரை என் வயித்துலே பெண்ணே பிறக்கலைன்னு நினைச்சுக்கறேன்......போ!” என்று ஆங்காரமாய்க் கூச்சலிட்டு ஒரு வருடத்துக்குமுன் வீட்டை விட்டு விரட்டினாளே அம்மா, அவளைத் தேடி இன்று இந்த நேரங்கெட்ட நேரத்தில், ‘சோ’ வென்று அலறிக் கொண்டு கொட்டுகின்ற மழையில் தன்னந்தனியளாக ஓடுகிறேன். “அம்மா! உன் மகளை மன்னித்து விடம்மா. இந்த நேரத்தில் நான் அநாதை. உன்னைவிட்டால் எனக்கு வேறு கதியில்லையம்மா. என்னைக் கைவிட்டுவிடாதேயம்மா” என்று கெஞ்சிக் கதறப்போகிறேன்.

அவளுடைய இரும்பு இதயம் என் கதறலுக்குச் செவிசாய்க்குமா? ......

மழை வலுத்தது. பாதையில் முழங்கால் அளவு நீர். நடப்பது மிகவும் சிரமமான காரியமாக இருந்தது. கண்ணில் பெருகிய நீர், மழை நீருடன் சங்கமம் ஆக, தள்ளாடியபடியே என்—இல்லையில்லை, அம்மாவின் வீட்டை நெருங்கினேன்.

பங்களா இருண்டு கிடந்தது, என் இதயத்தைப்போல!

• • •

பார்வதி அம்மாளா?.....ஐயோ!’ என்று ஊரே அஞ்சி நடுங்கும்படியான கண்டிப்புக்காரப் பேர்வழி என் தாய். அவளுடைய கனத்த சரீரமும், சோடா பாட்டில் அடிக் கண்ணாடிக்கப்பால் அனல் துண்டங்களாய் மின்னி, கனல்கக்கும் விழிகளும், எட்டு ஊரை அடிபணிய வைக்கும் கணீர் என்னும் குரலும் ...அப்பப்பா!...

அம்மா ஒருவிசித்திரமான பிறவி. யாரையும் மதிக்கமாட்டாள், எதற்கும் கலங்கமாட்டாள். அப்படி ஒரு சுபாவம்!

வேலைக்காரி முனியம்மா முதல் தோட்டக்காரன், பால்கார செல்லையாவரை அம்மாவைக் கண்டாலே நடுங்குவார்கள் என்பது ஒருபுறம் இருக்கட்டும். ஊரில் வாயாடி, வம்பிகள் என்று பெயரெடுத்த கோடிவீட்டு செண்பகம், மாடிவீட்டு மங்களத்தம்மாள் முதலியவர்களே அம்மாவுக்கு முன்னால் புலிமுன் பூனையாய் குறுகி நின்று பேசுவதைப் பார்க்கையில் எனக்கு சிரிப்பாய் வரும். அம்மாவின் கனத்த உடலைக் கண்டு பயமா? அவள் கரகரத்த குரலைக் கண்டு அஞ்சுகிறார்களா? அல்லது அம்மா பெரிய பணக்காரி என்ற பயம் அவர்களை ஆட்டிவைக்கிறதா?

ஊர் கிடக்கட்டும். அண்ணா விந்தன் அம்மாவின் முகம் பார்த்துக் கூட இதுவரை பேசியதில்லையே, பயமா? இல்லை, மரியாதையா? எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும் அம்மா ஒரு இரும்பு இதயம் கொண்டவள் என்பதில், மட்டும் சந்தேகமேயில்லை! மாரடைப்பு என்று அப்பா திடீரென்று செத்துப் போனாரே, அப்போதாவது அவள் அசைந்து கொடுத்திருப்பாளா? ஊஹும். கண்ணில் இரு துளிக் கண்ணீர். அப்புறம் அவள் வாயைத் திறக்கவேயில்லை. சிலையாக அமர்ந்து அவர் மரண அமைதியுடன் சாய்ந்து கிடப்பதை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்ததோடு சரி. ஊரெல்லாம் ‘பார்வதி கல் நெஞ்சுக்காரி, இரும்பு மனம் படைத்தவள்’ என்று தூற்றினார்கள். கொஞ்சமேனும் கவலைப்பட்டிருப்பாளா?...

இப்பேர்ப்பட்டவளிடம் என் இதயத்து உணர்ச்சிகளை எப்படி எடுத்துக் கூறப்போகிறேன்? அன்று —அந்தக் கடைசி நாளில்......ஓ! அதை இன்னும் என்னால் மறக்கவே முடியவில்லை!

• • •

மடை திறந்த வெள்ளமா? வானம் திறந்த மழையா?.....புயலோடுபுறப்பட்ட பூகம்பமா?....... இதில் நான் எது?

அம்மா கண்ணாடியைக் கழற்றித் துடைத்து மறுபடியும் அணிந்து கொண்டு அமைதியாக ஏறிட்டுப் பார்த்தாள். இறுகிக் கற்சிலைபோல் தோற்றமளித்த அவள் முகம்......! “என்னடி, சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டாயா? இன்னும் மீதி வைத்திருக்கிறாயா?...” அவள் நிதானமாகக் கேட்டாள்.

“அம்மா!......” தயங்கினேன். “என்னை மன்னித்து விடம்மா. உன் மகள் என்றும் தவறே செய்யமாட்டாள் அம்மா. என்னையறியாமல் மனத்தைப் பறிகொடுத்துவிட்டேன். அவர் இன்றி என்னால் வாழமுடியாது. பெரிய மனதுவைத்து எங்களைச் சேர்த்து வையம்மா!...”

அட்டகாசமாகச் சிரித்தாள் அம்மா.

“காதலாம், கத்தரிக்காயாம்! நீ என் மகள்னு சொல்றதுக்கே நாக்கு கூசுதுடீ! என்னோட கௌரவம், குலப்பெருமை, மதிப்பு எல்லாத்தையும் ஒரே நொடியிலே குலைச்சுடறேன்னு சொல்லிகிட்டு வந்து நிக்கறயே, அடிபாவி! யாருடீ அவன்?......உன் மனசை மயக்கின அந்த மன்மதன் யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?...”

அனல்கக்கும் விழிகளுடன் கனல் பறக்கும் வார்த்தைகளால் அவள் சாடுகிறாள்; நான் மரமாய் நிற்கிறேன்.

அண்ணா டாக்ஸியில் வந்திறங்கி விடுவிடென்று உள்ளே வந்தான். அவன் முகத்தில் மகிழ்ச்சி பூத்திருக்கிறது. “அம்மா! அவர்களுக்கு நம்ம கங்காவைப் பிடிச்சுப் போச்சாம். நிச்சயதார்த்தத்துக்கு நாள் பார்க்க வேண்டியதுதான்னு அருணாசலம் மாமா கூறிவிட்டார்...” அவனைப் பேசவிடாமல் அம்மா தடுத்து நிறுத்தினாள்.

“விந்தன், நிறுத்துடா! உன் தங்கை என்ன சொல்கிறாள் தெரியுமோ? யாரோ ஊர்பேர் தெரியாத பயலை அவள் ‘லவ்’ பண்ணுகிறாளாம். அவன் என்ன சாதியோ? கர்மம், கர்மம்!” அம்மா தலையில் அடித்துக் கொள்கிறாள்.




அண்ணு திகைத்து நிற்கிருன். "கங்கா, அம்மா சொல்வதெல்லாம் உண்மையா அம்மா?''

''அண்ணு! சாதி, மதம், பணம் இவைகளுக்கு அப்பாற்பட்டதுதான் காதல். பரிசுத்தமான தவமுனிவர்கள் தங்கள் வேள்விச்சாலையில் புனிதமாய் போற்றிக்காக்கும் தூய அக்கினியைப் போன்றதுதான் இரு உள்ளங்களின் சேர்க்கையும்—இப்படியெல்லாம் உன் கதைகளில் எழுதி வருகிருயே. அது உன் சொந்தத் தங்கையின் வாழ்வில் ஏற்பட்டுவிட்டதும் ஏன் அண்ணு இப்படிச் சிலையாக நிற்கிருய்? ஊருக்குமட்டும்தான் உபதேசமா? சொல் அண்ணு சொல்!'' அவனைப் பிடித்து உலுக்கினேன்.

''அடி, கங்கா! நீ என்ன சொன்ணுலும் சரி. எனக்குப் பிடிக்காத ஒரு காரியத்திற்கு நான் சம்மதிக்கவே மாட்டேன். அவனை மறந்துடு; அருணுசலம் மாமாவின் பையன் எஞ்சினியரா இருக்கான். மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம்...சொத்துபத்தெல்லாம் லட்சக் கணக்கில்... இதைவிட்டால் வேறே நல்ல சம்பந்தம் கிடைக்குமா?

''அம்மா! ஒரு பெண்ணுக்கு பணமே வாழ்கையில் எல்லாவற்றையும் நிறைத்துவிடும் என்று நினைக்கிருயா?'' நிதானமாகக் கேட்டேன்.

''அப்படி என்ருல்...?''

''ஆமாம் அம்மா! பார்வதி அம்மாள் எப்படி உறுதியான மனம் படைத்தவளோ, அவள் பெண்ணுக்கு மட்டும் அந்த உறுதி இல்லாமல் போயிடும்னு நீ எப்படியம்மா நெனைச்சே?...நான் வாழ்ந்தால் அவரோடுதான் வாழ்வேன். ஏழையாக—மாதம் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்காதவராக— லட்சக்கணக்கில் சொத்துக்கள் இல்லாதவராக இருக்கலாம். ஆனுல் அவர் என் தெய்வம்! அவர் சம்பாதிக்கும் வருமானத்தில் வெறும் கஞ்சி மட்டுமே குடித்தாலும் நிம்மதியாக—இன்ப வாழ்வு வாழ என்னுல் முடியும்...''

மேலே பேசுமுன் யாரோ ஒரு புது நபரின் குரல் குறுக்கிட்டது.'' சார்! டாக்ஸி வெகு நேரமாக நிற்கிறது. எனக்குப் பணம் தந்து அனுப்பிவிட்டால் தேவலை......'' என்று டாக்ஸி டிரைவர் வாசலிலிருந்து கத்தினுன்.

அந்தக் குரல்...! புல்லரித்தது எனக்கு. விடுவிடென்று வெளியே ஓடினேன். ''குமார்!... நீங்களா?'' எனக்கு வார்த்தைகள் அடைத்தன. தெய்வம்தான் என் அண்ணனை என் இதயச் செல்வரின் டாக்ஸியில் ஏற்றிக் கொணர்ந்ததோ?

''வாருங்கள் குமார், உள்ளே! சரியான நேரத்தில்தான் வந்திருக்கிறீர்கள்!''

அம்மாவின் முகத்தில் ஈயாடவில்லை. அண்ணன் பேயறைபட்டவன்போல் நின்ருன், 'ஒரு டாக்ஸி டிரைவரையா, போயும் போயும் பி. எஸ். சி. படித்த நீ காதலித்தாய்? என்ற குறிப்பு முகத்தில் தெரிந்தது. அண்ணு வேறுபுறம் முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

''என்னம்மா பேசாமல் நிற்கிருய்? இவர்தான் உன் மாப்பிள்ளை, பி. ஏ. படித்திருக்கிருர். படிப்புக்கேற்ற வேலை கிடைக்கும்வரை எந்தத் தொழிலும் கேவலம் இல்லை என்ற இலட்சியத்தில் டிரைவர் வேலை பார்க்கிருர். அம்மா, உன் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து எங்களைச் சேர்த்து வைக்க மாட்டேன்னு மாத்திரம் சொல்லிடாதேம்மா...''

என் கெஞ்சலோ கண்ணீரோ, அவள் இரும்பு இதயத்தைச் சிறிது கூட அசைத்ததாகத்தெரியவில்லை,

"ஏண்டி கடைசியா உன் முடிவு தான் என்ன? பெற்றவளை — இவ்வளவு நாள் உன்னை வளர்த்தவளை மீறி நடக்க நீ முடிவு செய்துவிட்டா யான்னு எனக்கு இப்பத் தெரியணும்!"

ஒரு நிமிடம் அமைதி; மயான அமைதி.

"அம்மா. என்னை மன்னிச்சுடும்மா! தெரியாமல் தவறு பண்ணிட்டேன். நீ சொல்ற மாப்பிள்ளையையே கல்யாணம் பண்ணிக்கிறேன்..." என்ற பதிலை அவள் என்னிடம் எதிர்பார்த்தாள். ஆனால் உறுதியாக—முடிந்த முடிவாக என் வார்த்தைகள் வெளிவந்தன; "என்னை மன்னிச்சுடும்மா. அவரை மறப்பதோ, அவரை விட்டுப் பிரிவதோ என்னால் முடியாத காரியம்!"

"போடி, வெளியே!" ஆங்காரமாகக் கத்தினாள் அவள்.

கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் தள்ளுவாள். அந்த ஆவேசம் அவள் கண்களில்தெரிந்தது. அவள் காலில் விழுந்து வணங்கினேன். "போய் வருகிறேன் அம்மா, அண்ணா!" என்று இருவரிடமும் விடைபெற்றேன். "போடி! என்னிக்குமே திரும்பி வராதே. இந்த வீட்டுப் படியை மிதிக்காதே! என் வயித்துலே பெண்ணே பிறக்கலேன்னு நினைச்சுக்கறேன் ... போ!" என்று கத்திவிட்டு சோபாவில் நிம்மதியாகச் சாய்ந்து கொண்டாள் அம்மா.

நீர் துளிர்த்த விழிகளுடன் குமாருடன் நடக்கிறேன். இனி நான் அவருடன் தொடர வேண்டிய நிழல்தானே!

டாக்ஸியில் ஏறும்போது மாடியில் அண்ணாவின் பனித்த விழிகள் தெரிந்தன. என்மேல் உயிரையே வைத்திருந்தவன் அண்ணா. ஈவிரக்கமற்ற பாவி நான். யாரையுமே பொருட்படுத்தாமல் சுகவாழ்வைத் தேடி வருகிறேன் ...... நான் நாடிச் செல்வது சுகவாழ்வுதானா?

திருநீர்மலையில் இருவரும் மாலை மாற்றிக் கொண்டோம். எங்கள் இல்லறம் இனிதே துவங்கியது. தாயின் நினைவு என்னைக் கலக்கும் சமயங்களில், "போடி, போ! என்னிக்குமே திரும்பி வராதே! என் வயித்துலே பெண்ணே பிறக்கலேன்னு நினைச்சுக்கறேன்...போ!" என்ற வார்த்தைகள் நினைவுக்கு வரும். கண்ணீர் வடித்துக் கதறுவேன். "அம்மா, பெற்ற மனம் பித்து என்பார்கள். இங்கே பெற்ற உன் மனம் கல்லாக இருக்கிறதே. நீ இரும்பு அம்மா! உன்னால் உன் மகளைப் பார்க்காமல் இருக்க முடியும். ஆனால் என்னால் உன்னைப் பாராமல் இருக்க முடியவில்லையே!"

என் மனம் கலங்கும் நேரங்களில் ஆறுதலாக அணைத்து, செல்லமாகக் கன்னத்தில் தட்டி, "என்ன? அம்மா ஞாபகம் வந்துவிட்டதா?" என்று அவர் கேட்பார். கண்களைத் துடைத்துக்கொண்டு முறுவலிக்க முயற்சிப்பேன்.

அம்மாவைச் சந்திக்கவே முடியாதோ என்ற என் ஆவல் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்குப் பிறகு இப்போதுதான் நிறைவேறுகிறது. அதுவும் எப்பேர்ப்பட்ட சூழ்நிலையில்...?

* * *

மழை வீறிட்ட ஒலியையும் மீறிக் கேட்டது, நான் கதவைத் தட்டிய சப்தம்.

எனக்கிருந்த பரபரப்பில், மின்சார மணி இருப்பதைக்கூட மறந்துவிட்டேன். வெளியே மழை! இடி! புயல்!...மின்னல்!

கதவு திறக்கப்பட்டது. "யாரது? ......"


நிமிர்ந்தேன். அண்ணா! "கங்கா! நீ...நீயா? இந்த நள்ளிரவில்...?" அண்ணா பதறினான், சொட்டச் சொட்ட நனைந்து, நிற்கும் என் கோலத்தைக் கண்டு; என் எதிர் பாராத வரவைக் கண்டு.

சிறு குழந்தை விளையாடும்போது வேறு குழந்தைகள் அடித்துவிட்டால் அழுவதுண்டு. அம்மாதிரிச் சமயங்களில் அது தன் தாயாரைக் கண்டுவிட்டால் அழுகை பீறிட்டுக் கொண்டு கிளம்பும். அதே நிலையில் தான் நானும் இருந்தேன். என் துயரத்தை உண்மையிலேயே தன் துயரமாகக் கருதக்கூடிய அண்ணனைக் கண்டதும் என் அழுகை மடைதிறந்த வெள்ளமெனப் பீறிட்டது. அதே சமயம் அம்மாவின் இரும்புக் குரல் கணீரென்று கேட்டது.

"டேய், விந்தன்! அந்தக் கழிசடையுடன் என்னடா பேச்சு?... வாழ்வைத் தேடிப் போனாளே, வாழ்வு கசந்துவிட்டதோ? வெளியே தள்ளிக் கதவைச் சாத்திட்டு வாடா! ......" ஈவிரக்கமின்றிப் பேசினாள் அம்மா. என் இதயம் வெடித்து விடுவது போலிருந்தது. துடித்தேன். கதறினேன். "நான் எங்கேம்மா போவேன்? உன்னை விட்டால் வேறு கதி ஏது? நான் செய்த தவறையெல்லாம் மன்னிச்சு இந்த சமயம் எனக்குக் கொஞ்சம் கருணை காட்டம்மா..."

"என்னடி நாடகமாடுறே? என்னை விட்டால் உனக்கு வேறு கதியில்லையா? இந்தபுத்தி எங்கேடி போச்சு ஒரு வருசத்துக்கு முன்னே? ஏன், அந்த வாழ்க்கை அலுத்துப் போச்சா?...இல்லை. அந்தப்பனாதைப் பயல் உன்னை விரட்டிட்டு வேறே எவளையாவது இழுத்துக்கிட்டு ஓடிட்டானா? உம்...போடி, போ! இங்கே உனக்கு இடம் கிடையாது. நீ எனக்கு மகள் இல்லை. நீ யாரோ, நான் யாரோ...இன்னுமா இங்கே நிற்கிறே? ஏய் விந்தன், அவள்

(12-ம் பக்கம் பார்க்க)





# அரியாணா சௌக்கியமா?

அன்புள்ள நண்பா!

சரியாக ஏழு திங்கள்களே ஆகியிருக்கின்றன. கோடையிடி, குளிர்த் தென்றலாகி—குளிர்த் தென்றல், கொடும் புயலாகி விட்டது!

காங்கிரசாரைப் பற்றிக் கணிக்கின்ற கணிப்புக்கள் எதுவும் காலத்துக் கொத்ததாக விருக்கமுடியாது என்பதற்கு இன்னுமோர் சான்று—எதிரே நின்று இகழ்ச்சிச் சிரிப்பைச் சிந்திக்கொண்டிருக்கிறது!

> "அகில இந்திய ரீதியில் காங்கிரசை அசைக்கக்கூடிய கட்சி, கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் தென்படவே இல்லை."

என்று எழுதி, எக்காளச் சிரிப்புச் சிரிக்கச் சொன்ன செய்தியெல்லாம் சிரிப்புக் குரியதாகி, நிகழ்ச்சிகளே நகைப்புக் குரியதாக மாறிவிட்ட சம்பவங்கள் கண் சிமிழ்த்துக் கொண்டிருக்கின்றன!

இந்த ஆண்டு மே மாதம் இரண்டாவது வாரத்தில், அரியாணாவில் நடைபெற்ற காங்கிரஸ் நாடகத்தைப் பற்றித்தான் நண்பா குறிப்பிடுகிறேன்.

அரிதாரம் கலைந்துவிட்டது! உண்மை வடிவம் புலப்பட்டு விட்டது.

கடந்த 26—5—68ம் தேதிய காஞ்சி இதழில் "அரியாணாவே பதில் சொல்லும்" என்று உனக்கு எழுதி இருந்தேன், அவகாசம் கிடைத்தால் மீண்டும் அதனைப் புரட்டிப் பார்! நிலைமைகள் எத்தனைத் துல்லியமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன என்பது புரியும்!

ஆமாம்! இப்போது அரியாணா பதில் சொல்லி விட்டது! தன் நயவஞ்சக நரித்தனத்துக்கு மட்டும் அது பதில் சொல்லவில்லை—நாட்டு மக்களுக்கு அது செய்துவிட்ட நம்பிக்கைத் துரோகம் பற்றியும் எடுத்துக் காட்டிவிட்டிருக்கிறது.

> "அரியாணா முதல்வர் தேர்தலில் நடைபெற்று முடிந்திருக்கிற இந்த அற்புதங்கள்—ஒரு இடைக் கால ஓய்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டுக்கள்! எந்த நேரத்திலும் புகையலாம்! வெடிக்கலாம்! விரிசல் அடையலாம்"

என்று அன்று எடுத்துக்காட்டி இருந்தது. எத்தனைச் சீக்கிரம் உண்மையாகிவிட்டது!

அரியாணா வெடித்துவிட்டது! புகைந்துவிட்டது! விரிசலடைந்துவிட்டது! எதற்குப் பிறகு தெரியுமா நண்பா!

ஏ, எனதருமை இளைஞர்களே! காங்கிரஸ் இளைஞர்களே! நிமிர்ந்து நில்லுங்கள்.

ஓராண்டுக்கு முன் காங்கிரஸ் தோல்வியுற்ற பின்—"ஒவ்வொருவரும் தங்கள் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருங்கள்" என்று எழுதி இருந்தேன்.

நான் காத்திருக்கச் சொன்ன காலம் வந்துவிட்டது.

தேசமெங்கும் நமக்கு வெற்றித் தேவி, விருந்து வைக்கின்றாள்.

பதவிக்காக இடம் மாறுவோரின் கதை முடிந்துவிட்டது.

பண்பான தலைமையை நாடியவர்களின் எதிர் காலம் ஆரம்பமாகி விட்டது.

எங்கு நோக்கினும் நாம்!! நெஞ்சை தட்டிவிட்டுக் கொள்ளுங்கள்!

தங்கள் வீட்டருகே இருக்கும் மூவர்ணக் கொடிகளை புதிதாக ஏற்றுங்கள்!

கூட்டணி நண்பர்களைப் பார்த்தால், என்ன நண்பர்களே! ஹரியாணா சௌக்கியமா? என்று கேளுங்கள்.

"கேரளம் வழி காட்டுகிறது" என்ற அவர்கள் பல்லவியை "ஹரியாணா வழி காட்டுகிறது" என்று மாற்றிப் பாடுங்கள்!

என்று இளைய ரத்தங்களைக் கூட்டிவைத்துக்கொண்டு போர்ப்பண் முழங்கி, முழவு ஒலித்து, திணவெடுத்தத் தோளராய் திண்டோள் மறவராய்—விம்மிப் புடைத்த மார்பினராய் நின்று பேசினார்களே—எழுதினார்களே, அதற்குப் பிறகுதான் நண்பா! இந்த கேவலம் நடைபெற்றுவிட்டிருக்கிறது.

1967க்குப் பிறகு ஹரியாணாவில் ராவ் வீரேந்திர சிங் என்பாரது தலைமையில் அமைந்த கூட்டணி ஆட்சியைக் கவிழ்த்த பெருமை காங்கிரசுக்கு உரியது! அந்தப் பெருமையில் பெரும் பங்குக்கு உரியவர் பகவத் தயாள்சர்மா ஆவார்.

பகவத் தயாள் சர்மா மட்டும்தான் "கவிழ்த்திடும் கலையில்" கைவந்தவர் அல்ல என்பதை நிரூபிப்பதைப் போல அவரது தலைமையிலமைந்த ஆட்சியும் கவிழ்க் கப்பட்டுப் போயிற்று—ஓராண்டு காலத்துக்குள்ளாகவே!

தமிழகத்தைப்போலவே, அங்கும் மக்கள் கேவல மாகத் தூற்றப்பட்டார்கள் — இழித்துரைக்கப்பட்டார் கள்.

சாம, பேத. தான, தண்டவகைகள் அனைத்தையும் பயன்படுத்தி மட்டுமல்ல— இவை அனைத்தையுமே கடந்த பணம், கோடிக்கணக்கிலே பயன்படுத்தப்பட்டு, மீண்டும் கடந்த மே திங்கள் புதிய ஆட்சி மலர்விக்கப் பட்டது!

ஆமாம் நண்பா! மலர்ந்தது என்பதினும், மலர்விக் கப்பட்டது என்பதுதான் சாலப்பொருந்தும்.

கனி என்பது, தானாகக் கனிவதாகத்தான் இருக்க வேண்டும்—தடிகொண்டுத் தாக்கிக் கனியவைக்க முயன்றார்கள். எப்படியோ கனிந்தும்விட்டது!

கனிய வைக்கப்பட்ட முறையைக் கணித்துத்தான்—

புகையலாம்—விரிசலடையலாம் என்று அப்போதே கணிக்க முடிந்தது!

நடைபெற்றதென்ன? வீர இளைஞர்களைக் கூட்டி வைத்து, கூட்டணியாரைச் சந்திக்கிறபோது, என்ன ஹரியானா சௌக்கியமா?" என்று கேளுங்கள் என்று சொல்லிக்கொடுத்தார்கள் இல்லையா, அதுவே நண்பா, காங்கிரஸ்காரர்களைக் கூட்டிவைத்து "என்ன நண்பரே, ஹரியானா சௌக்கியமா? என்று கேட்கும் நிலைமையைத் தோற்றுவித்துவிட்டிருக்கிறது.

கடந்த ஹரியானா இடைத்தேர்தலுக்குப் பின்னால், தமிழகத்தின் மூலை—முடுக்குகளிலெல்லாம், மக்கள் மனம் மாறிவிட்டார்கள்; காங்கிரசின் பக்கம் வேகவேக மாக வந்துகொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் பேசப் பட்டது.

நண்பா! அந்தப் பேச்சு, அப்போது ஒருவித மயக் கத்தைக்கூட கொடுத்தது! உண்மைதானோ? என்ற மருட்சியையும் தந்தது.

இப்போது புரிகிறது நண்பா! அரியானா மக்கள் மனம்மாறி காங்கிரசுக்கு ஆட்சிப் பெரும்பான்மை வழங்கியது என்னவோ, உண்மைதான்! ஆனால்—

காங்கிரஸ்காரர்கள்தான், மனம்மாறி, நம்பி வாக்களித்த வாக்காளர் பெருமக்களது நல்ல நம்பிக்கைக்கு, துரோகமிழைத்து விட்டார்கள்! நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்கள்!

என்று புரிகிறது இப்போது!

பகவத்தயாள்சர்மா என்பவரது தலைமையில் 19 எம். எல், ஏ. க்கள் காங்கிரசைவிட்டு விலகியதன் மூலம் ஆட்சி ஆட்டம் கொடுத்தது.

சூட்டோடு சூடாக முதல்வர் ஆளுநருக்கு குடியரசுத்தலைவர் ஆட்சிக்குப் பரிந்துரைத்தும் விட்டார் ஒரு கிழமைகூட முற்றாக முடியவில்லை.

சென்றவர்களில் சிலபேர் மீண்டும் திரும்பினார்கள். 6 சுயேச்சைகள் காங்கிர சில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

ஆட்சி ஆடிக்கொண்டிருக்கிறது— கவிழ்ந்துவிடவில்லை.—(கவிழக்கூடும்!)

பதவிக்காக இடம்மாறுவோரின் கதை: முடிந்துவிட்டது

என்று எழுதிக்காட்டிக் காங்கிரசுக் கட்சியின் புதிய தொடர்கதையைத் தொடங்கிக் காட்டினார்களே— அதன் பிறகுதான்—

அந்தக்கதை முடியவில்லை—தொடரும் என்றாகி இருக்கிறது நிலைமை!

இடைத் தேர்தல் மூலம், ஏற்கெனவே பெற்றிருந்த இருபது இடங்களை இழந்து புதிய இருபது இடங்களைப் பெற்று பதவிப் பொறுப்புக்கு வந்த பன்சிலால், அமைச் சரவைக்குள்ள பெரும்பான்மை எட்டு எண்களே யல் லவா நண்பா! அதிலே பத்தொன்பதுபேர் வெளியேறிய பின்னரும், பன்சிலாலுக்கு 41 எண்ணிக்கை இருக்கிறது என்று காட்ட முடிகிறது என்றால்,

கதை முடிந்துவிட்டது.

என்ற பொருளா? தொடர்கதை என்ற பொருளா?

---

10-ம் பக்கத் தொடர்ச்சி

கழுத்தைப் பிடிச்சு வெளியில் தள் ளிட்டு வாடா!..."

அம்மாவா பேசுகிறாள்? இல்லை யில்லை, அவளது இரும்பு நெஞ்சம் பேசுகிறது. வெளியே பேய் மழை 'சோ'வென்று கொட்டிக் கொண் டிருக்கிறது.

"அம்மா!...உன் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்திலே எனக்கு உதவி செய்ய யாருமே கிடையாது. டாக்ஸி யில் போய்க் கொண்டிருக்கும்போது எதிரே வந்த லாரி மோதி அவர் ஆஸ்பத்திரியில் சாகப் பிழைக்கக் கிடக்கிறார் அம்மா! அவருடைய உயிர் பிழைக்கணுமின்னா டாக்டர் இந்த மருந்தையும், ஊசியையும் வாங்கி வரச் சொல்கிறார். விலையோ ரொம்ப அதிகம். என் தாலி நிலைக் கணுமின்னா இந்த உதவியை நீ செய்தால்தான் அது நடக்கும். அங்கே ஆஸ்பத்திரியில் அவர் சுய நினைவில்லாமல் கிடக்கிறார். அம்மா! என் தாலியைக் காப்பாற்று அம்மா! ......" கதறி அவள் காலில் விழு கிறேன்.

"நிசமாகவா?..."—அம்மா பதறு கிறாள். "அடிப் பைத்தியமே! இந்த விபரத்தை முன்னாலேயே சொல்லி யிருக்கப் படாதோ?...டேய், விந் தன்!...இரும்புப்பெட்டியைத் திறந்து வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு போ. மருந்தை வாங்கிக் கொண்டு வா...மாப்பிள்ளை உயிரைக் காப்பாற்ற எவ்வளவு செலவானா லும் பரவாயில்லை, உம்...ஓடு!"

விழியைத் துடைத்துக்கொண்டு நம்பிக்கையின்றிப் பார்த்தேன்.

அம்மாதான் பேசுகிறாள்!

தாலி என்ற புனிதத்தின் மதிப்புத் தெரிந்தவள். என்ன இருந்தாலும் அவள் ஒரு 'தாய்' அல்லவா? கைகூப்பி அந்தத் தாயுள்ளத்தைத் தொழுது நிற்கிறேன்.

இரும்பு இதயம்தான்; இரும்பு இளகாது என்று யார்சொன்னார்கள்?

★

பன்சிலால், கூட்டணியைச் சேர்ந்தவரா? கலப்பட மற்ற காங்கிரசுக் கட்சியா?

பன்சிலால் காங்கிரசுக் கட்சிக்காரர் என்ருல், சுயேச்சைகள் காங்கிரசுக்காரர்கள் ஆன மர்மம் என்ன?

ஓடிப் போனதுகளில் சில திரும்பி வந்ததன் இரக சியம் யாது?

சுயேச்சைகளுக்கும் திரும்பி வந்ததுகளுக்கும் அமைச்சர் பதவி—அல்லது அமைச்சர் அந்தஸ்துடைய பதவி தரப்படும் என்ற பேரம் நடத்தப்பட்டிருக்கிறதா இல்லையா?

பதவிக்காக இடம் மாறி வந்திருக்கிருர்கள் என்பது தவரு?

பதவி வெறிபிடித் தலைகிருர்கள் காங்கிரசுக்காரர் கள் என்பது பொய்யா? பதவிச் சுவையைக் காட்டி ஒழுக்கத்தைக் குலைக்கிருர்கள் என்பது குற்றச்சாட் டாகாதா?

சந்தர்ப்பத்திற்காகக் காத்திருங்கள் என்று
எழுதி இருந்தேன்; அந்தக் காலம் வந்து
விட்டது.

என்கிருர் கோப்பைக் கவி இதுதான் நண்பா, அவர் சொன்ன காலம் எது என்பதை விளக்கிக் காட்டும் காலம்! அது வந்துவிட்டது!

பதவியைக் காட்டி, ஓடிப்போனதுகளையும் சுயேச் சைகளையும் இழுத்துப் பிடித்துக்கொண்டு வந்துநிறுத்தி வைத்திருக்கிருரே, பன்சிலால் என்ற காங்கிரஸ் முதல் வர், அதுவே சொல்கிறது—

காங்கிரஸ் பதவி வெறி பிடித்தது அல்ல

என்ற முழக்கத்துக்கு ஒரு ஆணித்தரமான மறுப்பை!

அகில இந்திய ரீதியில் காங்கிரசை
அசைக்கக்கூடிய ஒரு கட்சி—எதிர்க் கட்சி
வடிவத்திலே வேண்டியதில்லை—காங்கிரசே
போதும்!

காங்கிரசுக்காரர்களாலேயே, காங்கிரஸ்,
அசைக்கப்படப் போகிறது என்பது இப்போது
தெளிவாகிவிட்டது. அரியானு, அதைத்தான்
நிரூபிக்கிறது,

இல்லையென்ருல், முதல்வரின் முதல் பரிந்துரையின்படி, அங்கே, ஆட்சி கலைக்கப்பட்டிருக்கவேண்டும்!

இது, பண்பான தலைமையின நாடியவர்களின் எதிர்காலம் ஆரம்பமாகிவிட்டது என்பதற்கு ஒரு எடுத் துக்காட்டு!

அல்லது நாடிய தலைமை, பண்புடையதல்ல என் பதை விளக்கிக் காட்டுவதாக விருக்கவேண்டும்.

அரியானு நாடகத்திலே பரிதாபத்துக்குரிய பாத் திரத்தை ஏற்றிருக்கும் பதவத்தயாள் சர்மாவுக்கு நம் அனுதாபங்கள்!

நகைக்கத்தக்க வேடமணிந்திருக்கும் முதல்வர் பன்சிலாலுக்கு நம் பாராட்டுக்கள்—பதவி வெறி எங்களை விட்டுவிடவில்லை என்பதை நிரூபித்துக் காட்டி இருப் பதற்காக!

திண்டாடிக்கொண்டிருக்கும் ஆளுநருக்கும் நம் அனுதாபங்களைத்தான் படைத்துக்கொள்ளவேண்டும்—ஏனென்ருல் அவர் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்ருல் மத்திய அரசின் முடிவை எதிர்பார்த்துத் தீரவேண்டும்.

அரியானு மக்களுக்கும் நம் அனுதாபங்கள் சேரத் தான் வேண்டும்; காரணம் 'காங்கிரஸ் ஒன்ருல்தான் நிலையான ஆட்சியைத்தரமுடியும்'—என்று நம்பி ஏமாந்தார்களே, அதற்காக! பதவி வெறியர்கள் காங்கிரசுக்காரர்கள் வடிவிலேதான் இருக்கிருர்கள் என்பதைப் புரிந்துகொள்ளாமல் போனூர்களே, அதற்காக!

இந்த இதழ் அச்சாகுமுன், அரியானு நாடகத்தின் அடுத்தக் காட்சி ஆரம்பமானுலும் ஆகிவிடக்கூடும்!

அதற்குள் நண்பா, எதிர்ப்படும் காங்கிரசுக்காரர் களைப் பார்த்தால் "என்ன! அரியானு சௌக்கியமா?" என்று கேட்டுவைத்துக்கேள்!

ஏன் என்ருல், அவர்கள் வரப்போரும் பிப்ரவரித் தேர்தலுக்கு முழு மூச்சாக மோதத் தயாராகிக் கொண்டிருக்கிருர்கள்.

நெஞ்சை தடவி விட்டுக்கொண்டு கேள்— 'அரியானு சௌக்கியமா' என்று!

மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டிருக்கின்ற இடத்துக் கருகே இருக்கின்றவரைப் பார்த்துக்கொள்:

எப்போது அரைக் கம்பத்தில் பறக்கவிடப்
போகிறீர்கள்? என்று!

அரியானு தலைமை, பண்புடையதல்லவா என்றும் கேள்; பண்பு கெட்டுப்போயிற்று என்றுகூடக் கேட்க லாம்!

ஆனுலும் நண்பா, நிலையான ஒரு ஆட்சி அமைக் கும் என்று நம்பி வாக்களித்தவர்களுக்குச் செய்யப்பட் டிருக்கிற நம்பிக்கைத் துரோகத்துக்கு மட்டும் மன்னிப் புத் தரமுடியாது!

அரியானு கதை முடியவில்லை—அது ஒரு தொடர் கதை! தொடர் நாவல்!!

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்**


### காந்தி வாக்கு

"குழந்தைகள் பெற்றோரது உருவ அமைப்பைப் போலவே பெற்றோரது குணங்களையும் பெறுகிருர்கள்"

"தாய்மையில்லாத உள்ளத்தை உண்மையிரக்கத்தால் தாய்மைப் படுத்த முடியாது. உணவை மாற்றுவதால் அந்த உள்ளத்தில் எந்த விளைவும் இருக்காது"

"எந்த வயதினராக இருப்பினும், எப்படி வளர்ந்தவர்களாக இருப்பினும் எல்லோருக்கும் அறநெறிப் பயிற்சி வழங்கலாம்"

"ஏராளமான உரைகள் நிகழ்த்து வதனுல் நாம் சுய ஆட்சிக்குத் தகுதி உடையவர்களாக முடியாது. நமது நடத்தையினுல்தான் அந்தத் தகுதியைப் பெறவேண்டும்"



# வினா-விடை

1. நடைபாதைக் கோயில்களை அகற்றும் சென்னை நகர மேயரின் திட்டத்துக்கு எதிர்ப்பு மிகுவதேன்?

கோயில்களைப் பற்றி காந்தியடிகள் என்ன சொல்லி இருக்கிறார் என்பதனை மறைப்பதற்காக, அந்தத் திட்டத்துக்கு ஒரு எதிர்ப்பை உருவாக்கிக் காட்டி இருக்கிறார்கள். அது தவிர, அகத்தையும், புறத்தையும் தூய்மைபடுத்த வழி காட்டவேண்டிய இறைவனை தூய இடத்தில் வைத்து வழிபடவேண்டும் — நடைபாதையில் அல்ல; போக்குவரத்துக்கு இடையூறு செய்து அல்ல என்பதை ஏற்க மறுக்கும் குறுகிய மனப்பான்மைகளும் முக்கிய காரணம் ஆகும். அரசியல் நோக்கோடு கூறவேண்டுமானால், சில எதிர்க்கட்சிகள் இதனைத் தங்கள் பிரசாரப் பொருளாக்கிக் கொள்ள வாய்ப்புப் பெறுகின்றன என்றும், அவற்றிற்கு சென்னை நகரத் தூய்மையில் நாட்டமில்லை என்றும் தான் கூறவேண்டி இருக்கும். இந்த எதிர்ப்பு விஷயத்தில் பெரியார் அவர்களது கருத்து முழுக்க முழுக்கச் சரியானதாகும்

2. வானொலியில் இந்திச் செய்தி நேரமாறுதல்பற்றி காங்கிரசின் கருத்து என்ன?

சென்னை கச்சேரி ரோடுக்கு எழுதவேண்டிய கேள்வியை காஞ்சிபுரத்துக்கு அனுப்பிவிட்டீர்கள். இதுவரையில் கிடைத்திருக்கிற தகவல்களின்படி, காங்கிரசும் இதனை எதிர்க்கிறது என்றுதான் நம்பவேண்டி இருக்கிறது. மத்திய அரசின் தகவல் துறை அமைச்சர் ஷா, இப்போது கழகத்தின் கருத்துக்கு மாருகப் பேசி இருக்கிறார். இதனைப் பார்த்தபின் காங்கிரஸ் தன் முடிவை மாற்றிக் கொண்டாலும் மாற்றிக் கொள்ளக்கூடும் ஆனாலும், இந்த மாறும் முடிவு பற்றி, நாகர் கோயில் தேர்தல் முடிவுவரையில் மூச்சுக்கூட விடமாட்டார்கள். பொறுத்திருந்து பார்ப்போமே!

3. தமிழக அரசின் பரிசுச்சீட்டுத் திட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருந்தவர்களைக் காணோமே, எங்கே அவர்கள்?

அவர்கள் மேற்குவங்கத்துக்குப் போயிருக்கிறார்களாம்! ஜனதிபதி ஆட்சியின் கீழிருக்கும் அங்கேயும் பரிசுச் சீட்டுத் திட்டம் அமுலிலிருப்பதால், குடியரசுத் தலைவரே அதனை நடத்துவதாகப் பொருள்படும். அதனால் முதலில் அங்கே போய் போராடலாம் என்று புறப்பட்டுப் போய்விட்டார்களாம்!

4. பரிசுச்சீட்டுத் திட்டத்துக்கு எதிர்ப்புக்கள் வலுத்து வருவது எதனால்?

அது, அரசாங்கம் எதிர்பார்த்ததைவிட அதிக அளவு வெற்றியையும், லாபத்தையும் தேடித்தரத் தொடங்கி இருப்பதனால், அதற்கு ஒரு எதிர்ப்புக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்! மிகுந்த வருவாய் பெறுவதின் மூலம் நல்ல பல திட்டங்களுக்கு முதலீடு செய்ய அல்லது வரி விதிப்புக்களின் வாய்ப்புக்களைக் குறைக்க முடியுமில்லையா இதனால்! இப்படிச்செய்துவிட்டால் மக்களுக்கு 'வாழ்வு' கிடைத்து விடுமே! கிடைக்கலாமா அது— கிடைத்துவிட்டால் எதிர்ப்பவர்களுக்கு 'வாழ்வு'-ஏது ஐயா!

5. ஒரு திங்களுக்கு முன் எனது சிறுகதை யொன்றைப் பிரசுரித்திருந்தீர்கள். அதற்கான அன்பளிப்பு இதுவரை அனுப்பப்படவில்லையே ஏன்?

கதைகளுக்கு அன்பளிப்புத் தரப்பட்டு வந்த முறையினை, சில காலத்துக்குத் தள்ளி வைத்திருக்கிறோம்—அதனால்!

6. தான் வளர ஏணி தந்தவர் அறிஞர் அண்ணாதான் என்று பொன்னாடை போர்த்துக்கொண்ட நடிகர் ஒருவர் கூறி இருப்பது எதைப் பிரதிபலிக்கிறது?

அது எதனையும் பிரதிபலிக்கவில்லை. எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் உண்மைகள், மறைக்கப்பட்டுவிட முடியாது என்பதற்கு அவரும் ஒரு எடுத்துக்காட்டு என்றுமட்டும் தெரிந்து கொள்ளுங்கள் போதும்!

7. 'காஞ்சி'யின் அமைப்பை மாற்றியமைக்க மாட்டீர்களா?

எப்படி இருக்கவேண்டும் என்று கருதுகிறீர்கள் என்பதைத் தெளிவாகத் தெரியப்படுத்துங்களேன்!

8. இந்திச் செய்தியின் நேர மாற்றத்தை நிஜலிங்கப்பா வரவேற்றிருப்பது எதைக் காட்டுகிறது?

அவர் உடலில் ஓடிக்கொண்டிருக்கிற இரத்தம், யாருக்குச் சொந்தம் என்பதைக் காட்டுகிறதோ?

9. உணவுப் பண்டங்களைக் கடத்தும் கொடுமை அடியோடு தடுக்கப்பட முடியாதா?

ஏன் முடியாது? கடத்தலில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களைப் பறிமுதல் செய்துவிடும் பழக்கம் மேற்கொள்ளப்பட்டால், பெரும் பகுதி கடத்தலைத் தடுத்துவிட முடியும்—வாகனப் பறிமுதல் என்கிறபோது கடத்தலுக்கு யார் உதவ முன்வருவார்கள்?

10. அழகுப் போட்டிகள் அவசியந்தானா?

அணு, அணுவாக அங்க அழகினை ரசிப்போர் – கூடி இந்தப் போட்டியினை நடத்தும்போது, அவசியமா இல்லையா என்ற பிரச்னைக்கு இடமேது? இதுபோன்ற ஆபாச நிகழ்ச்சிகளில் பல பெரியவர்கள்கூட பங்கேற்க வருவதுதான் வருந்தத்தக்கதா யிருக்கிறது.

11. 'தமிழப் பண்பாடு' கெட்டுவிட்டது என்று எதை வைத்துச் சொல்கிறீர்கள்!

எண்ணங்களை—எழுத்துக்களை—செயல்களைக் கொண்டு!

12. ஆலைத் தொழில் பிரச்னைக்கு விடிவே இல்லையா?

எதற்கும் முடிவு என்று ஒன்று இருந்துதான் தீரும். நவீன ரக துணிகளின் உற்பத்திக்கும், இறக்குமதிக்கும், அன்று பிரிட்டன் செய்ததுபோல, ஒரு முடிவு கட்டிவிட்டால், இந்தத் தொழிலுக்கும் ஒரு விடிவு ஏற்படத்தான் செய்யும்! செய்ய வேண்டியவர்கள் மத்திய அரசினர். இந்தத் திசையில் எந்த ஒருவருடைய சிந்தனையும் சென்றதாகத் தெரியவில்லையே!



இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை, குளோப், ஸ்ரீ கிருஷ்ணா, சரவணா, நூர்ஜஹான்
மற்றும் தென்னாடெங்கும்
K.R.பாலன் அளிக்கும்
அன்னை பிலிம்ஸ்
சக்கரம்
டைரக்‌ஷன்· A.காசிலிங்கம்
கதை, வசனம்· மதுரை திருமாறன்
பாடல்கள்· வாலி இசை·எஸ்.எம்.எஸ்
ஒளிப்பதிவு: விஜயா ஸ்டுடியோ· வாஹினி
தயாரிப்பு K.வரதராஜன் · R.S.சாந்தாராம்
SATHYAM

# காஞ்சி

## பொங்கல் மலர்

சுவைமிகு கனிகளென

பேரறிஞர்

## அண்ணாவின்

தம்பிக்கு மடல்

அரசியல் நடப்புக்கள்

கதைகள்

மற்றும்

முன்னணி எழுத்தாளர்கள்

பலரது

எழுச்சிமிக்க எழுத்தோவியங்களும்

மலர்ந்திருக்கின்றன!

படிக்கத் தவறாதீர்கள்!!

23.12.1968

விலை 1 ரூ 50

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்—8
88, திருக்கச்சிநம்பி தெரு. [illegible]